118

உ

சிவமயம்

# சிவக்கவிமணி

# வாழ்க்கைத் திறன்

ஆக்கியோர் :

C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை

சென்னை

13—7—1948

உரிமை
ஆக்கியோர்க்கே

விலை [illegible] அணா



சிவக்கவிமணி

C. K. சுப்பிரமணிய முதலியார்

பெரியபுராண பேராசிரியர்

6027a

உ

சிவமயம்

சிவக்கவிமணி

# வாழ்க்கைத் திறன்

## 1. குலமும் குடும்பமும்

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும், காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"

நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளைகாட்டும்; அதுபோலக் குலத்தின் இயல்பை அதன்கண் பிறந்தார் வாயிற் சொல் காட்டும், என்றூர் ஆன்றோர். இந்தக் கருத்தில் நல்ல குடியிற் பிறந்தார்களுக்கு உவமையாகக் காட்டியிருக்கும் தொழிலையே தம் குடித்தொழிலாகக் கொண்டுள்ளோர் வேளாளர், அவ்வேளாளர் பல நாடுகளின் குடி உரிமைப் பெயர் கொண்டிருந்தபோதிலும், அவரில் தொண்டைமண்டலத்தார் இந்நாளில் தனிப்பெருமையும் மதிப்பும் பெற்றிருக்கின்றனர். சேக்கிழார் உதித்த தனிப்பெருமையும், தனிப் பாடலில் 'சான்றோர் உடைத்து' என்ற சிறப்பும், இம்மண்டலம் பெற்றிருந்ததால் இப்பெருமையும் மதிப்பும் அடைந்திருக்கலாம். அத்தொண்டைமண்டலத்து இருபத்திநான்கு கோட்டங்களில் மணவிற்கோட்டம் என்பது திருவாலங்காட்டிற்கருகில் உள்ளதொரு கோட்டம். அக்கோட்டத்தில் சேர்ந்த சில குடிகள் மாங்காட்டில் இருந்தனர். அவர்கள் 'கொண்டைகட்டி' என்று மருவின பெயர்கொண்ட "கொண்டல் கட்டி" என்ற குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களிலே 'நெல் விளையார்' மரபிலே ஒரு சிறந்த குடும்பம் இருந்தது. இக்குடும்பம் காலம்

இடம் வினை செயல் முதலியவற்றின் மாறுபாடுகளினால் கொங்கு நாட்டை அடைந்தது. சில நூற்றாண்டுகளுக்கு முந்தி கோவை நகரை அடைந்து அதிலே வாழத் தொடங்கியது.

இப்போது தெரிந்த மட்டில் இக்குடும்பத்தில் மூலமகனார் ஆறுமுக முதலியார் என்பார் மயிலாத்தை அம்மையை வாழ்க்கைத் துணைவி ஆக்கிக்கொண்டு இல்லறம் நடத்திவந்தார். அவர்களுக்கு உலகநாத முதலியார் என்ற ஒருவர் தோன்றி பார்வதி அம்மையை மணந்து இல்வாழ்க்கை நடத்தினார். அவர்களின் தவத்திற்கு ஏற்பக் கந்தசாமி என்ற ஒரு அருமை மகனார் உதித்தார். அன்னார் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மகா வித்துவான் சந்திரசேகரம் பிள்ளை அவர்களிடம் மாணவர் ஆகித்தானும் ஒரு பெரும் புலவர் ஆனார். அக்காலத்தில் பல தொழில்களினும் வழக்கறிஞர் தொழில் நாட்டில் மதிப்புடையதாக இருந்தது. மதிப்பு மட்டுமேயன்றிப் பொருள் பெறுதற்கும் ஏற்ற வசதிகள் உற்றதாக இருந்தது. கந்தசாமி முதலியாரும் தமிழில் புலமை பெற்றிருந்தும் குடும்பப் பெருமையினை எண்ணி வழக்கறிஞர் ஆனார். ஆனால் ஏனைய வழக்கறிஞர்களைப் போன்று பொருள் வருவாய் ஒன்றையே கருதித் தமிழையும் சமயத்தையும் புறக்கணித்தார் அல்லர். தமிழிலே பல நூல்களை இயற்றி வித்துவான் என்ற விருதும் அடைந்தார். சைவ சமயத்திலும் மிகவும் ஈடுபட்டுப் பல சமயப்பணிகளை இயற்றிப் பெரும்புகழ் அடைந்தார்.

வித்துவான் கந்தசாமி முதலியார் அவர்கள் உரைநடை எழுதுவதிலும் செய்யுள் இயற்றுவதிலும் நிபுணர். எளிய நடையிலும் ஆழ்ந்த கருத்துக்களை அமைத்து உருக்கமாகப் பாடக்கூடியவர். அவர்கள் இயற்றிய நூல்கள் திருப்பேரூர்க் கிள்ளை விடுதூது - மரகத வல்லியம்மை மாலை-பச்சைநாயகியம்மை ஆசிரிய விருத்தம் - பச்சைநாயகியம்மையார் ஊசல் மருதாசலபதி உயிர் வருக்கமாலை திருஞானசம்பந்தர் வெண்பா மாலை திருநாவுக்கரசர் வெண்பாமாலை முதலியன செய்யுணூல்கள். அவர் அச்சிட்ட கருவூர்த்தல புராணம், பேரூர்ப் புராணம், அவிநாசிப் புராணம், பவாநிகூடற் புராணம் முதலிய

வற்றின் உரை நடைகள் அவருடையன. இவற்றில் கிள்ளை விடுதூதில் தன் சொந்த வரலாற்றை அடியிற்கண்ட அடிகளில் சிறப்பித்திருக்கின்றார் :

... ... ... இன்ன டகழ்

39. எய்தி யுயர்வா மிளங்கிளியே ! யெந்தனது
செய்தி இலவெடுத்துச் செப்பக்கேள் - வையத்துள்

40. வீசு புகழ்சேர் வியன்பதியென் றிவ்வுலகிற்
பேசுகரு வூரிற் பிறந்தோன்யான் - மூசுதிரை

41. வெள்ளப் புனன்மே வியசீர்க்கங் காநுலந்திற்
பிள்ளையென வந்து பிறந்தேன்யான் - வள்ளல்பேர்

42. பூணுலக நாதன் பொருந்தவரும் பார்ப்பதியாற்
பேணுமக வாகப் பிறந்தேன்யான் - பூணற்

43. சரிய புகழ்சே ரரங்கசா மிக்குப்
பிரியமரு காகப் பிறந்தேன் - உரியபல

44. சீரிட்ட நாளினலஞ் சேர்கந்த சாமியெனப்
பேரிட் டழைக்கப் பிறந்தேன்யான் - வாரிட்ட

45. நற்றெருட்டி லேற்றி நலம்பலபா ராட்டியெனைப்
பெற்றவர்கள் போற்றப் பிறந்தேன்யான் - உற்ற

46. களங்க மூளவெல்லாங் காசினியிற் றோன்றி
வளர்வதே போல வளர்ந்தேன் - இளமையிலே

47. தந்தை யிறந்தொழியத் தாயார் பிறந்தகத்தில்
வந்து வளர்க்க வளர்ந்தேன்யான் - செந்தமிழும்

48. அல்லாம விந்நா ளரசுபுரி யாங்கிலர்தஞ்
சொல்லதுவுங் கற்கத் தொடங்கினேன்

* * * *

54. தெய்வச் சிறப்புஞ் சிவனடியார் தஞ்சிறப்புஞ்
சைவச் சிறப்புந் தரிக்கிலேன் - பொய்யார்

55. புலத்திரளின் சேர்க்கையாற் புந்திவரத் தக்க
கலைத்திரளை யேதொன்றுங் கல்லேன் - கொலைத்திரள்சேர்

56. விவிலியநூற் கொள்கை மிகுத்தலா லான்றோர்
நவிலியநூ லொன்று நவிலேன் அவமாகக்

57. காலங் கழித்தேன் கழித்தேன் குலவொழுக்கஞ்
சீலங் கழித்தே திரிந்தேன் - ஞாலமுடன்

58. காசு பணத்திற்குங் கண்மயக்கும் வேசைகட்கும்
ஏசு மதத்திற்கு மிச்சைவைத்தேன் - சீசியென

59. நல்லாரைக் கண்டா னடுங்குவே னல்லார்கள்
அல்லாரைக் கண்டா லகங்களிப்பேன் - பொல்லாத

60. துன்மார்க்க மென்றூற் சுகித்திடுவேன் சுத்தசைவ
சன்மார்க்க மென்றூற் சலித்திடுவேன்

* * * *

75. பன்னு ளவமாகப் பாழுக் கிறைத்துவிட்டுப்
பின்னளிற் சேர்ந்தேன்யான் பேருரை - யந்நாள்

76. திருநாளா யெங்கோன் றெருவிற் பவனி
வருநாளாய் நேர்ந்த வகையால்

* * * *

மேலும் அக்காலத்தில் விவிலிய சமயத்தார் (Xians) நாட்டில் மிகுந்த வற்புறுத்தலைக் கைக்கொண்டு சைவ சமயத்தை எதிர்த்தும் இகழ்ந்தும் வந்தனர். அதனைக் கண்டித்து அக்கிள்ளை விடுதூதில் பல ஆழ்ந்த கருத்துக்களை உட்புகுத்தி எழுதியிருக்கின்றார். அவைகளை மறுத்து வீராசாமி பிள்ளை என்ற ஒரு விவிலியர் எழுதிய பிள்ளை விடுதூதிற்கு மறுப்பாகத் தன் மாணவரைக்கொண்டு திரண சண்டமாருதம், பிள்ளை விடுதூது, ஆபாச விளக்கம் என்ற இரண்டு அருமையான நூலையு முறையே செய்யுள் நடையும் உரை நடையுமாகத் தான் வெளிப்படுத்தினர். தான் இயற்றிய நூல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மிகத் தெளிவாக ஆண்டிருக்கிறார். தான் நூல்களை இயற்றியது மட்டுமன்றி பண்டைய நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து பிசகின்றி அவைகளை மக்களுக்கு உதவும் பொருட்டு அச்சிடுவித்தார். அவைகளில் மேல சிறந்தவை பேரூர்ப் புராணமும் கரூர்ப்புராணமுமாம். இவைகளுக்கு அருமையான உரைநடை யெழுதி பாமர மக்களும் படித்தறியும்படி செய்திருக்கின்றார்.

கந்தசாமி முதலியாருக்குச் சமய ஈடுபாடு மிகவும் உண்டு. தான் நாடோறும் கொண்டிருந்த வாழ்க்கையிலே சமயநூற் பாராயணமும் வழிபாடும் சிறந்தவை. தொழிலின் இடை இடையே இவைகளைக் கொண்டிருத்தல் மிக அருமை. வாழ்க்



வக்கில் பரிட்சை தேறித் தொழில்முகம்
புகுந்த நிலை (முதல் மனைவியாருடன்)
1903



பி. எ. பட்டம் பெற்றபோது
இருந்த கோலம் (சென்னை)
1901

றுப்பாக்களை எழுதுவதன்றித் தினந்தோறும் குறட்பா, வெண்பா முதலிய பல பாட்டுக்களை வாழ்த்தாகவும் எழுதி வைப்பார். இந்த முறையில் அவருடைய வாழ்க்கை ஒரு அரிய ஒழுங்கு அமைதியைக் கொண்டிருந்தது. அவர் பல பொதுக் கைங்கரியங்களிலும் ஈடுபட்டிருந்தார். திருப்பேரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான்மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அப்பெருமான் திருக்கோயில் சுவாமிகோயில் அம்மன்கோயில் முழுதும் பழுது பார்த்துப் புதிப்பித்தவர்களில் அவரே முதன்மையானவர். அன்னார் புதுப்பித்த கருவறை முதலிய நான்கு மண்டபங்கள் கொண்ட கோயில்களை இப்போதும் உள்ளன ஆகும். இவ்விதம் பல தொழில்களில் ஈடுபட்டுச் செவ்விய நல்வாழ்க்கை வாழ்ந்தார்.

கந்தசாமி முதலியார் வடிவம்மை என்ற கற்புக்கரசியை மணந்து இல்லறம் நடத்திவந்தார். அவர்கள் செய்த தவத்தின் பயனாக நமது வரலாற்றுத் தலைவர் சிவக்கவிமணி அவர்கள் தோன்றினார். ஈசுவர ஆண்டு மாசித்திங்கள் 10-ம் நாள் புதன் கிழமைக்குச் சரியான 1878-ம் ஆண்டு பிப்ரவரி௴ 20-ந்தேதி கோவையில் வைசியத் தெருவில் பெற்றோர்கள் குடியிருந்த பண்டைய சிறு இல்லத்தில் சிவக்கவிமணி அவர்கள் தோன்றினார். அவருக்குச் சுப்பிரமணியன் என்று பிள்ளைத்திருப் பெயர் இடப்பட்டது. பெற்றோர்கள் பிறந்த குழந்தையை வெகுஅன்புடன் வளர்த்து வந்தார்கள். குழந்தையும் அறிவோடு எதையும் எளிதில் அறிந்துகொள்ளும் இயற்கையுடன் வளர்ந்து வந்தது.

## 2. இளமையும் கல்வியும்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி; அஃதொழிந்த மணியும் பொன்னும் முதலாயின செல்வமல்ல- இந்த அறிவுரையில் அமைந்திருக்கும் கருத்தை மேற்கொண்டு

வளர்ந்தவர் சுப்பிரமணியனார். குழவிப் பருவத்தில் தந்தை யாரால் கல்வி கற்பிக்கப்பட்டபோதிலும் அவருடைய ஆதரவு சுப்பிரமணியனார்க்கு வெகுநாள் நீடித்திருக்கவில்லை. இவரது பதினோரும் வயதில் தந்தையார் சிவனடி அடைந்தார். அந்தப் பெருத்த பிரிவினையை முற்றும் அறிந்து உணரக்கூடிய நிலைமை அவர் அடைவதற்கு முந்தியே தகப்பனார் காலம் ஆனது அவரை வருத்தத்திற்குள்ளாக்கவில்லை. தகப்பனார் முன் உணர்ந்தே பிள்ளையை அக்காலத்தில் மிகப் புகழ்பெற் றிருந்த வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் வசத் தில் ஒப்படைவித்திருந்தார். "வாத்தியார்" என்று சொன்ன அளவிலே யாழ்ப்பாணத்திலிருந்து கோவைக்கு வந்து கோவைக் கல்லூரியிலே கணக்கு ஆசிரியராகத் திகழ்ந்திருந்த வைத்தியலிங்கம் பிள்ளை என்று அக்காலத்து மக்கள் அறிவார் கள். திரு. பிள்ளையவர்கள் நித்திய மாணியார் (நைட்டிகப் பிரமசாரி) ஆகி அதனால் தமக்கு ஒரு பிள்ளை இல்லாதவராகி உலகில் உள்ள அறிஞர் பிள்ளைகளையெல்லாம் தமது பிள்ளை களைப்போல் எண்ணித் தம் இல்லத்திலே வைத்துப் படிப்பித்த பெரியார். இவருடைய இல்லம் பண்டைக் குருகுலத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது. நீதிபதி குப்புசாமி ஐயர் முதற்கொண்டு நூற்றுக்கணக்கான மாணவர்கள் இவர்கள் வீட்டிலேயே இலசவமாகக் கல்வி கற்றார்கள் என்றால் "வாத்தி யா"ருடைய 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' நிலையில் எவரே இருப்பார். அப்படிப்பட்ட தன்னலம் அற்ற பெரியா ரிடம் ஒப்புவிக்கப்பட்டு சுப்பிரமணியனார் கல்வி கற்கத் தொடங்கினார். கோவைக்கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலமும் தமி ழும் கற்றார். தன் தந்தைபோன்று தமிழில் அவருக்கு ஒப்பற்ற ஆர்வம் இருந்தது. அதற்காகத் தன் தகப்பனாரிடம் தமிழ் கற்ற பண்டிதர் திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்களிடம் அணு கித் தமது தமிழ் அறிவை பெருக்கிக்கொண்டார். திருச்சிற்றம் பலம் பிள்ளை அவர்கள் தன் தகப்பனாரின் ஆசிரியரான சந்திர சேகரம் பிள்ளை அவர்களின் மகனார். ஆகவே, முறைப்படியும் ஆசிரிய மாணாக்கர் பரம்பரை ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு பண்டிதர் திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்களிடம் சுப்பிர

மணியனூர் தமிழ் பயிலத் தொடங்கியது 1894-ம் ஆண்டு ஆகும்.

கோவைக் கல்லூரியில் சேர்ந்து படித்த சுப்பிரமணியனூர் ஒவ்வொரு வகுப்பும் தவறாமல் தேர்ந்து 1897-ல் எப். ஏ. என்ற பல்கலைக்கழகத் தேர்தலில் வெற்றியடைந்தார். தமிழ்ப் பரிசுகள் எல்லாவற்றையும் பெற்றதன்றி தன் பள்ளியில் முதன்மையாகவும் தேர்ந்தார். பிறகு சென்னைக்குச் சென்று அரசாங்கக் கல்லூரியில் (Presidency College) சேர்ந்து தத்துவ நூல் (Philosophy) பாடத்தைக் கற்கத் தொடங்கினார். 1898-ல் திருமணம் ஆகவே தன் குடும்பத்துடனேயே சென்னையில் வசித்துக்கொண்டு கல்வி பயின்றார். 1899 டிசம்பரில் நடந்த பி. ஏ. பட்டத் தேர்தலில் வெற்றி பெற்றார். அத்தேர்தலில் தமிழில் மாகாணத்திலேயே முதன்மையாகத் தேர்ந்து தங்கப் பதக்கமும் பெற்றார். அந்தக் காரணத்தினால் பள்ளியில் நடந்த தேர்தலுக்குச் செல்லாமலிருந்தும் இவரது திறமையை அறிந்த ஆசிரியர்கள் அந்தப் பள்ளித் தமிழ்ப்பரிசும் இவருக்கு வழங்கினார்கள். இந்தச் சிறப்புப் பெறுதல் வெகு அரிது. மேலும் ஆங்கிலத்திற்குத் தமிழ் மொழிபெயர்ப்பு செய்யும் தேர்தலில் 120 ரூ. பரிசு பெற்றுத் தமது முதற் சம்பாதனையாகிய அதில் 100 ரூபாயைத் தன் ஆசிரியர் திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் இயற்றிய "மாணிக்க வாசகர்" என்ற அரிய நூல் வெளியிடக் காணிக்கையாக உதவி அதனை வெளிப்படுத்தினார்; சர்வகலாசாலையிற் பி. ஏ.வில் பெற்ற பொற்பதக்கத்தைப் பேரூர்க் கோயில் கும்பாபிஷேகத்தின்போது ஸ்ரீபட்டிப் பெருமான் திருவுருவிற் சொர்ண மாணிக்கமுடனிட்டனர். மேலும் பல்கலைக்கழகத்துத் தேர்தலில் கேள்வித்தாளில் கண்ட ஆறு அடிகள் கொண்ட ஆங்கிலச் செய்யுளுக்குத் தமிழில் எட்டு அடிகள் கொண்ட அகவற்பாவை ஆக்கி விடையாக எழுதினார். இச்செய்தி ஆசிரியர்களை வியக்கச் செய்தது. அச்செய்யுள் வருமாறு.

ஆங்கிலப் பாட்டுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு

*தன்புற தேல்சித் தொன்னகர் நீங்கும்போ*
*தன்பு மழிவுமென் னகத்தே தோன்றினும்*

* * * *

*ஆயினுந் தீமைகு ழிலண்டனை யகன்று*
*சேய்மையின் வயலகத் தூயகா லுட்கொளப்*
*புரிந்து போமவ ளன்புக்*
*கிரங்கியென் னெஞ்ச மகிழ்ந்தனன்யானே*

அரசாங்கக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் ஒரு தொழிலை முன்னிட்டுக் கல்வி கற்க எண்ணினார். தன் தகப்பனார் மேற்கொண்டிருந்த தொழிலிலேயே தானும் இருத்தல் வேண்டும் என்ற ஆவல் அவருக்கு இருந்தது. ஆகவே சட்டம் பயில முயன்றார். ஏற்கனவே இல்லறத்தில் புகுந்துவிட்டபடியால் பல காலம் படிப்பில் கழிப்பது சரியல்ல என்று எண்ணி ஒரே ஆண்டில் கற்கும் வகுப்பில் சேர்ந்து 1903-ம் ஆண்டில் சட்டத்தில் தேர்ந்தார். சட்டத் தேர்தலில் தேர்ந்தவுடனே கோவை சேர்ந்து வழக்கறிஞர் தொழிலில் 1903-ம் ஆண்டில் அமர்ந்தார்.

கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்றிருந்தாலும் தமிழில் ஆர்வம் மிகுந்திருந்ததினால் எம். ஏ. பட்டமும் பெறவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருந்தது. ஆனால் அக்காலத்தில் தமிழ் ஒன்றே கற்றால் எம். ஏ. பட்டம் பெறமுடியாது. தமிழோடு வேறொரு மொழியும் பயிலவேண்டியிருந்தது. வடமொழிக்கு அந்த நிபந்தனை வேண்டியதில்லை. ஆகவே நமது தலைவர் தெலுங்கு கற்கத்தொடங்கினார். தமது வாழ்க்கைத் தொந்தரவுகளினால் தெலுங்கு மொழியை வேண்டிய அளவு கற்கமுடியவில்லை. ஆகவே பி. ஏ. பட்டத்தோடு அவர் ஆறுதல் அடையவேண்டி வந்தது. இந்த முறையில் அவர் இளமையும் கல்வித்திட்டமும் ஒழுங்குடன் நடைபெற்றன.

## 3. தொழிலும் பணியும்

" தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில் "

தாம் தெரிந்துகொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயும் எண்ணிச் செய்துமுடிக்க வல்லவர்க்கு எய்துதற்கரிய பொருள் யாதொன்றும் இல்லை என்பது ஆன்றோர் கருத்து. இக்கருத்தையே ஒட்டி வழக்கறிஞர் தொழிலை ஏற்றார்போலும். தன் தகப்பனார் வழி காட்டிய தொழில் தன் இனத்துத் தொழில் அல்லவா? அதிலே இருத்தல் அன்றோ நல்ல முறை. மற்றும் வாழ்க்கைத் தொழில் வழக்குகளை நடத்தி ஊதியம் பெறுதல் ஆகும். தன் தகப்பனார் அதனோடு நில்லாமல் சில சார்புத் தொழில்களையும் வைத்திருந்தார் அல்லவா? அவைகள் ஊதியம் இல்லாத் தொழில்கள். தன்னலம் இன்றிப்பிறர்க்குரிமையாகும் தொழில்கள், உலகத்தின் முன்னேற்றத்தைக் குறித்துத் தமிழ் சைவம் இவைகளைப் பரப்பும் தொழில். தகப்பனார் தமிழில் நூலியற்றித் தமிழை வளர்த்தார். சைவநூற் பரப்பு, சைவாலயத் திருப்பணி இவைகளில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். தகப்பனுக்கு மகன் செய்யவேண்டிய நன்றிச்செயல்களில் அவர் கொண்ட கருத்தைப் பெருக்கி வளர்த்தல் ஒன்று அல்லவா? அதனை உட்கொண்டு அவ்விருவகைத் தொழில்களையும் மேற்கொண்டார். ஆகவே இம்மூன்று வகைகளிலும் தன் தொழிலை தன் இனத்தோடு தேர்ந்தெடுத்துக்கொண்டார். ஆகவே இதைவிட அரும்பொருள் யாதேனும் உண்டோ? இந்த வகையில் மேலே கண்ட திருக்குறளுக்கு நமது சுப்பிரமணியனார் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

சட்டத் தேர்தலில் முதல் தர வழக்கறிஞர் ஆகத் தேர்ந்த நமது தலைவர் கோவையில் தமது இல்லத்தில் வழக்கு நடத்தும் தொழிலில் அமர்ந்தார். வேலை தொடங்கியதும் முதல் முதலில் குற்ற வழக்குகளை நடத்தத் தொடங்கினார். ஆனால் அவ்வழக்குகள் அவருக்குப் பிடிக்கவில்லை. மனப் போக்கை ஒத்தல்லவோ தொழிலும் செல்லும். குற்றவாளி

களைக் காண்பதும் அவர்களைத் தப்புவிப்பதும் அத்தனைப் பிடித்தமாக அவருக்குத் தோன்றவில்லை. நாள் செல்லச்செல்ல அவ்வித வழக்குகளை விட்டுவிடத் தொடங்கினார். குற்ற வழக்குகளை நடத்துதல் ஒருவகையில் எளிது. விரைவில் முடிவடையும். ஊதியமும் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால் அவர் எடுத்துக்கொண்டு மிகுதியாக நடத்தின வெறும் வழக்குகளோ நீடித்த வேலையும் குறைந்த வருவாயும் தருவன. என்றாலும் தமது மன நோக்கத்திற்கு இசைய வெறும் வழக்குகளையே எடுத்துக்கொண்டு நடத்தினார். என்றாலும் அத் தொழிலிலும் தமக்கு வேண்டிய அளவு வருவாய் உள்ளவை களை எடுத்து நடத்தினார். வந்த வழக்குகளை எல்லாம் இழுத்துப் போட்டுக்கொண்டு பணத்தாசையால் தம் பெயரை யும் மன அமைதியையும் கெடுத்துக்கொண்டவரல்லர்.


இம்முறையில் தொழிலில் ஈடுபட்டு இருந்தபோது கோவையில் 'ப்ளேக்கு' என்ற கட்டி நச்சுக்காய்ச்சல் பரவிற்று. ஊர்மக்கள் எல்லாரும் ஊரைவிட்டு வெளியேறினார் கள். சுப்பிரமணியனாரும் வெளியேற வேண்டி வந்தது. இரண்டு மூன்று ஆண்டுகள் அடுத்தடுத்து ப்ளேக்கு வந்த தனால் வழக்குத் தொழிலும் தடைப்பட்டது. ஒருமுறை சேலம் ஜில்லா ஆற்றூரில் தங்கி அங்கே வழக்குத் தொழிலைச் செய்துவந்தார். அங்கு மூன்று மாதங்கள் வரை தங்கித் தொழிலை நடத்திவந்ததில் ஓரளவு ஊதியம் கிடைத்தது. அதனை வைத்துக்கொண்டு முதல்முறை இராமேசுவர யாத் திரை செய்துமுடித்தார். யாத்திரைசெய்து தலங்களைத் தரிசித்து தீர்த்தம் ஆடி மூர்த்திகளை வழிபடுவது என்றால் சுப்பிரமணியனார்க்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்தக் கருத்து சின்னஞ்சிறு பிராயத்திலேயே அவர் நெஞ்சில் ஊறியிருந்தது. ஆகவே சமயம் வாய்த்தபோது இந்தக் கருத்தை நிறைவு படுத்திக்கொள்வார். கோவையில் காய்ச்சல் மிகுதியாக வீசின காலத்தை இராமேசுவரம் என்ற சோதிர்லிங்க தரிசனத்திற் குப் பயன்படுத்திக்கொண்டார்.

1910 முதல் கோவையிலேயே நிரந்தரமாக இருக்கத் தொடங்கினார். காய்ச்சல் அடிக்கடி வந்து மக்களுக்குத் தீங்கு



சிவக்கவிமணியாரும் அவரது இரண்டாவது மனைவியாரும்

1922



சிவக்கவிமணியார்
ஆன்மார்த்த சிவபூசை செய்கின்ற கோலம்
13 - 7 - 1948
(சிதம்பரம் ஸ்ரீ உலகமூர்த்தி தேசிகர் மடத்தில் எடுத்த படம்)

இழைத்துவந்த வகையில் அதனைத் தடுக்க மக்கள் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டனர். காய்ச்சல் எலிகளால் வருகின்றது என்று அறிந்து எலி நடமாட்டம் இல்லா வீடுகளைக் கட்டினதல்லாமல் அவைகள் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு ஏகாமல் இருக்கும் பொருட்டு வீடுகளைத் தனித்தனியே கட்டவும் தொடங்கினார்கள். இதை முன்னிட்டுச் சுப்பிரமணியனாரும் 1910 ல் இராமநாதபுரத்திற்குக் கிழக்கே ஒரு நிலத்தை வாங்கி அதில் ஒரு வீட்டைத் தகுந்த முறையில் கட்டினார். காய்ச்சல் காலங்களில் இவ் வீட்டில் இருந்துகொண்டும் ஏனைய காலங்களில் ஊர் வீட்டில் இருந்துகொண்டும் தம் தொழிலை நடத்திவந்தார்.

தொழில் செய்யும் வகையில் ஊதியத் தொழிலேயன்றி ஊதியமில்லாத் தொழில்களும் செய்துவந்தார் என்று மேலே கூறப்பட்டது. அவைகளிலே சிறப்புற்றது கோயிற் பணிவிடையாகும். தான் வழக்கறிஞர் தொழிலுக்கு வாராததற்கு முந்தியே இதில் ஈடுபட்டார். 1902 ல் கோவை தாலுக்காவில் இந்து தேவத்தானக் கழகத்தின் ஒரு அங்கத்தினர் பதவி தேர்தலுக்கு வந்தது. மிக இளைய வயதினரான சுப்பிரமணியனார் அந்தத் தேர்தலுக்கு நின்றார். அதில் வெற்றியும் அடைந்தார். இந்தப் பதவியை 1902 முதல் 1921 வரை வகித்தார். அதிலே 1910 முதல் 1921 வரை செயலாளர் ஆகவும் இருந்தார். இந்த வகை கோயில்களின் பரிபாலனத்தில் வெகு பாடுபட்டு வேலை செய்தார். பிறர் நிந்தனைகளையும் பொருட்படுத்தாமல் தமது உள்ளத்தின் ஆணைப்படி வேலை செய்தார். இவைகளைப் பின்னர் விவரிப்போம்.

## 4. குடும்பமும் வாழ்வும்

"ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

தவம் செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப் பண்ணித் தானும் தன் அறத்தில் தவறாத இல்வாழ்க்கை அத் தவஞ் செய்வார் நிலையினும் பொறை உடைத்து என்பது

கருத்து. இக் கருத்தை ஒட்டியே சுப்பிரமணியனுர் இல் வாழ்க்கைத் திறம் நடந்தது. சென்னையில் கல்லூரியில் படித்த பொழுதே 1898ல் இவரது திருமணம் நடந்தது. மனையாளின் பெயர் மீனுட்சியம்மை. திருமணம் சேலம் ஜில்லா கங்கை வல்லியில் நடைபெற்றது. அப்பொழுது மணமகனுர் பாடிய வெண்பா,

*கங்கை வல்லிமேவும் கனக சபாபதி*
*நங்கை மீனுட்சிதனை நான்மணம்செய்—தங்கமிகு*
*நாள்விளம்பி யாவணியி னற்பதினென் ருர்குருவே*
*வேள்வியொடு வேட்ட தினம்.*

திருமணம் நடந்ததும் 1898முதல் 1901வரை சென்னையிலேயே படிப்பிற்காக குடித்தனம் நடத்தப்பெற்றது. அப்போது 1901-02 ஆண்டுகளில் உடல் மெலிவடைந்து இருமல் உபாதி தொடங்கிற்று. பல மருத்துவர்கள்பால் மருந்து அருந்தியும் முடியாமல் டாக்டர் T. M. நாயர் அவர்களிடம் காட்ட அவர் தொண்டை நோய் தீர்க்கும்பொருட்டு அவரை சிகிச்சை செய்து உயிர் அளித்தார். பிறகு கோவையில் சிறிது நாள் இருந்துவிட்டு மீண்டும் 1903-ல் சட்டம் படித்து தேர்தலுக்கு 1903-ல் செல்ல வேண்டி வந்தது. அதில் வெற்றியடைந்ததும் கோவையில் தொழிலில் அமர்ந்து இல்லறம் நடத்திஞர்.

இவ்வாறு நடத்திவந்த இல்லறத்தின் பயனுக மக்கட் பேறு உண்டாகவில்லை. மனைவியும் நோய்வாய் உற்ருள். 1916-ல் மீனுட்சியம்மை சிவன்தாள் அடைந்தாள். பிறகு 1917-ல் அவள் தங்கையையே இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்துகொண்டார். இவர் பெயரும் மீனுட்சியம்மை என்பது. ஆனுல் கடவுள் செயல் அளக்க முடியாதது. இந்த தாரத்திற்கும் மக்கட்பேறு ஏற்படவில்லை. ஆனுல் இல்லற மகிழ்ச்சிக்குக் குறைவே இல்லை. எப்போதும் உறவினர்கள் நிறைந்தே இருப்பார்கள். தம் மனைவியின் உடன் பிறந்தார் மக்கள் எப்போதும் தமது மக்களைப்போல் பாராட்டப்படுகின்றனர்.

இல் வாழ்க்கையின் சிறப்பு சுப்பிரமணியனார் வீட்டில் தான் பார்த்து அறிய வேண்டும். அடியார்க் கழதளித்தல் அடியார்களின் திருநாட்களைக் கொண்டாடுதல், சிவவழி பாடு செய்தல், தமிழ் நாட்டுத் தலயாத்திரை புரிதல், சைவ நூல்களை ஆராய்தல், திருமுறை ஓதுதல், ஓதுவித்தல், சைவ ஒழுக்கத்தைப் பரப்புதல் ஆகிய இவைகள் எப்பொழுதும் இவ்வில்லறத்தார்பால் காணலாம். கணவனார் மனதைச் சற்றேனும் புண் படுத்தாமல் அவர் குறிப்பறிந்து இல்லறம் நடத்தக் கூடிய கற்புக்கரசி. இவ்வில்லத்து அரசியைப்போல் வேறெங்கும் காணல் அரிது. அந்த அரசியாரும் அடிக்கடி நோய்வாய்ப் பட்டபோதிலும் தன் குறைகளைச் சற்றேனும் வெளியே கூறாமல் எப்பொழுதும் கணவனார் நலத்தையே பெரிதும் விரும்பி அடங்கி ஒடுங்கி இருப்பார். இல்லறவாழ்க்கையில் வேறு என்ன பண்பு வேண்டும். விருந்தோம்பல் அடியார்க் கழதளித்தல் என்ற வகைகளில் திருக்குறளிலும் திருத்தொண்டர் புராணத்திலும் கூறி உள்ள முறைகளைச் சிறிதேனும் வழுவாமல் காக்கும் தன்மை முதலியாருக்கு மட்டும் அன்று அவரது மனைவியாருக்கும் மிகுதியாக உண்டு. உறவினர்கள் எப்போதும் நிரம்பிய வண்ணமாக இருப்பார்கள். சிறிதும் மனம் கோணாமல் அந்த அம்மையார் வந்தவர்களுக்கு உணவு அளிப்பார்கள். நாள்தோறும் அவரது வாயில் திண்ணையில் அடியார்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். எல்லாருக்கும் இல்லை என்னாது உணவளிப்பார்கள். இவ்விதம் அறத்தை நடத்துவதற்கு வேண்டிய முன் யோசனையுடன் சிறிய அறச் சாலைகளையும் தாபித்துள்ளார்கள். அவைகளின் மூலம் வரக்கூடிய வருவாயிலிருந்து வேண்டிய அடியார்களுக்கு உணவு கிடைக்கும். சிலநாள் உண்டு சிலநாள் இல்லை என்ற பேச்சே இவர்கள் மனையில் இல்லை. இந்த தயாளக் குணத்தை அறிந்து சில அடியார்கள் நாள்கள் கணக்காக இவர்கள் வீட்டில் தங்கியிருப்பது உண்டு. அப்படி இருந்தும் அடியார்களை ஒரு கடுஞ் சொல்லும் சொல்லமாட்டார். சிவ வேடமே மெய்ப் பொருள் என்ற உணர்ச்சி இவர்களிடம் மிகுதியும் உண்டு.

முதலியாரும் மனைவியாரும் ஒத்த பண்பு உடையவர்கள். முதலியார் அவர்கள் சமய தீக்கை, விசேடதீக்கை நிர்வாண தீக்கை பெற்ற சீராளர். ஆகவே நாள்தோறும் செய்யக்கூடிய பூசை வழிபாடு இரண்டு மணிக்குக் குறையாது. நீதிமன்றத்தில் வேலை இருந்தாலும் அதையும் தாமதிக்கச் செய்யும் பண்புடையவர். அதனை நீதிபதியார்களும் அறிந்து இவர்க்குச் சிறிது தயை காட்டுவதுண்டு. இவ்விதப் பண்பில் இவருடைய வாழ்க்கைக்குத் தக்கபடி நடந்துகொள்ளும் நோக்கம் குடும்பத்தில் எல்லாருக்கும் இருக்க வேண்டும் அல்லவா? அதற்கு வேலையாள் இருந்தால் போதாது. மனைவியாரே பொறுப்பு எடுத்துக்கொள்ளவேண்டும். அதனை முன்னிட்டு மனைவியாரும் சமய விசேட தீக்கைகள் பெற்றிருக்கிறார்கள். பகல் 2 மணி யானாலும் இரவு 12 மணி ஆனாலும் வழிபாடு முடிந்த பிறகு தான் கணவனார் உணவு கொள்வர். அதன் பிறகு தான் மனைவியாரும் உணவு அருந்துவர். இப்படிப்பட்ட ஒத்த பண்பு தற்காலத்தில் காண்பது அருமை. அந்த மேல்நிலையில் முதலியார் இல்லறவாழ்வு இருக்கிறது என்று அறிக. அதனால்தான் தவம் செய்வார்களும் இவர்கள் மனையில் என்றும் காத்திருப்பர் எனலாம். பொறை எங்கு மலிந்து இருக்கிறது? கூறவும் வேண்டுமா?

## 5. சாலையும் சங்கமும்

“ செவிக்கு உணவு இல்லாத போழ்துசிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். ”

செவிக்குணவாகிய கேள்வி இல்லாத பொழுது வயிற்றுக்கும் சிறிதுணவு இடப்படும் என்பது பொருள். விருந்தோம்பலும் அடியார்களுக்கு உணவு அளித்தலும் வயிற்றுக்குச் செய்யப்படும் தொண்டு ஆகும். இதனை முதலியார் அவர்கள் தம் வாழ்க்கையில் பெரிதும் ஆண்டு வந்தார் என்று கண்டோம். ஆனால் அதனினும் சிறந்தது செவிக்கு உணவு என்று திருமறை கூறியதை அப்பெரியார் அறிவார்கள். அந்தக்கருத்தை எண்ணிச் செவிக்கு உணவு தருதலில் மிகவும் ஈடுபடத் தொடங்கினர். இத் திருத்தொண்டில் இரண்டு விதங்களின்

அவர் ஈடுபட்டார். தகப்பனார் கந்தசாமி முதலியார் அவர்கள் தமது இல்லத்திற்கு எதிரிலே ஒரு நிலையம் 1866-ம் ஆண்டில் ஏற்படுத்தி அதற்குச் சைவப் பிரசங்கசாலை என்று பெயர் தந்து அதில் வாரம் ஒருமுறை சைவப் பிரசங்கங்கள் நடத்தி வந்திருந்தார். மேலும் இவரது ஆசிரியர் வேறொரு நிலையம் நிறுவி அதில் தமிழைப் பெருக்கி அதற்குக் கோவைத் தமிழ்ச் சங்கம் என்று பெயரிட்டிருந்தார். இந்த இரண்டு நிலையங் களும் அவைகளை நிறுவினவர்களுக்குப் பின் செயலற்று இருந்தன. அவைகளை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும் என் பது முதலியாரின் கருத்து. அந்த வகையில் செவிக்கு உணவு ஊட்ட எண்ணினார்.

இந்த இரு நிலையங்களின் மறுமலர்ச்சி 1915-ல் தொடங் கியது. இந்த ஆண்டிற்குள் கோவை கிழார் கோவையில் வழக்கறிஞர் ஆனார். 1915-ல் முதலியார் இல்லத்தில் இருவரும் கூடிப் பேசினார்கள். இரு நிலையங்களும் உயிர்ப்பிக்கப்பட்டன. உடுமலையிலிருந்து வழக்கறிஞர் திரு. சதாசிவம் பிள்ளை முதலி யோர்கள் இம் முயற்சியில் கலந்து கொண்டார்கள். பழைய நிலையத்திலேயே இரு நிலையங்களும் தொழில்செய்யத் தொடங் கின. அவை வாரப் பேச்சுகள், மாணவர்களுக்குத் தேர்தல்கள், பரிசுகள், நூற்சாலை, வெளியீடு முதலியன. நோக்கங்கள் வளர வளர இந்நிலையங்கள் சிறப்பாக வேலை செய்து பல மாணவர்க ளிடம் தமிழ் உணர்ச்சி ஏற்படுத்தின. ஆண்டுதோறும் விழாக் கள் நடத்தப்பட்டு, பெரியவர்களைக்கொண்டு விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. இந்த வகையில் தமிழ் உணர்ச்சியும் சைவ அன்பும் கோவையில் நிறுவின. இந் நிலையங்களில் முதலியார் அவர்கள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்கள்.

இப்படி யிருக்கையில் சைவப் பிரசங்க சாலையின் கட்ட டம் நகர சபையாரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. நிலையங் கள் இருக்க இடம் இன்றி அடுத்துள்ள அங்காளம்மன் ஆல யத்தில் சிறிது காலம் நடைபெற்றன. ஆனால் சில ஆண்டு களில் நகர சபையார் வேறு ஒரு இடத்தை விலைக்குத் தந்தார் கள். அதில் இந் நிலையங்களின் கட்டடம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 1928-ல் நிலைக்கல் நாட்டப்பட்டது. அக்

கட்டடத்திற்குக் கோவை வர்த்தகர் மருதாசலம் செட்டியார் மக்கள் 5000 ரூபா வழங்கினார்கள். கட்டடம் எழும்பியது. ஏனைய பகுதிகளை முதலியார் அவர்கள் எழுப்பினார்கள். இவ்வாறு முடிந்த கட்டடம் 1929-ல் அமைச்சர் திரு. முத்தைய முதலியார் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. அதில் புத்தகசாலையும் சொற்பொழிவுசாலையும் இருக்கின்றன. அறிஞர்கள் வந்து இறங்கி இருக்க வசதிகளும் உண்டு.

இவ்விரு நிலையங்களிலும் வாரப் பேச்சுகளும் முறையாக சைவநூற் சொற்பொழிவுகளும் நடைபெறும். முதலியார் அவர்கள் சைவ நூல்களை முறையாக ஓதி வருகிறார்கள். அடியார்களின் திருநாட்கள் கொண்டாடப் பெறுகின்றன. பல அன்பர்கள் இந்நிலையங்களில் ஈடுபட்டு தமிழில் வல்லுநர் ஆகிச் சொற்பொழிவு ஆற்றத் தெரிந்திருக்கிறார்கள். பல மாணவ மாணவிகளுக்கும் இந்நிலையம் பெரிதும் பயன் படுகின்றது.

மேலும் தமது இல்லத்தில் சேக்கிழார் திருக்கூட்டம் என்ற ஒரு சைவசபை ஏற்படுத்தி அதன்சார்பில் ஒரு தேவாரப் பாடசாலையை வெகு ஆண்டுகள் நடத்திவந்தார். அப் பாடசாலையின் வாயிலாக நூற்றுக்கணக்கான சிறுவர்களும் சிறுமிகளும் முறைபாகத் தேவாரம் ஓதுவதற்குக் கற்றுக் கொண்டார்கள். கோவையில் மார்கழித் திங்களில் திருவெம்பாவை ஒழுங்காக நடைபெறுவதற்கு இந்தத் தேவாரப் பாடசாலைதான் அடிப்படைக் காரணம். பல பஜனைக் கூடங்களிலும் நாடகப் பாடல்களுக்கு மாறாக தேவாரமாதித் திருமுறைகள் ஓதுவதற்கும் இந்தப் பாடசாலையே காரணம் என்க.

இனி, சேக்கிழார் திருக்கூட்டத்தின் சார்பில் தல யாத்திரைகள் பல நடைபெறுகின்றன. சிறப்பாக, 1935-ம் ஆண்டு முதல் திருவஞ்சைக்களத்து யாத்திரைகள் முறையாக இத்திருக்கூட்டமே நடத்துகிறது. அதற்குத் தவறாமல் செல்பவர் திரு. முதலியார் அவர்களே ஆவர். சென்னைப் பெரியார் கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் அவர்களை வரவழைத்து மூன்று ஆண்டுகாலம் நாடோறும் தொடர்ந்து திருத்தொண்டர் புராண விரிவுரை நிகழ்த்தச் செய்தவர் முதலியாரே ஆவர். அச்சிறந்த செய்கையின் காரணமாக கோவை

ஞகரார் அடைந்த நன்மைகள் எழுத்தில் அடங்காதவை. இந்தப் பல வகைகளிலும் செவிக்குணவு நல்கப்பட்டது.

## 6. ஊர்த்தொண்டும் கழகத்தொண்டும்

" கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு "

தமக்கு நீர் உதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன. ஆகலான் அம்மேகங்கள்போல் வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவன அல்ல என்பது இதனுரை. தமிழுக்கும் சைவத்திற்கும் செய்த திருத்தொண்டுகள் இயற்கையிலேயே முதலியார் அவர்களின் குடும்பப் பரம்பரையாக வந்தவைகள் என்று கூற முடியும். அவரோ அவைகளோடு மட்டும் நிற்கவில்லை. மற்ற உலகியல் செயல்களிலும் தனக்கு ஒரு கடப்பாடு உண்டு என்று எண்ணி ஞர். தான் பிறந்த நகரத்து மக்களுக்குத் தொண்டுபுரிய வேண்டாமோ? இந்தக் கருத்தை மேற்கொண்டு 1922ல் நகர சபையின் அங்கத்தினர் தேர்தலுக்கு நின்றார். அதில் வெற்றியும் பெற்றார். அதிலோ 4 - முறையும் நின்று 1935 வரை நகரசபை அங்கத்தினராக இருந்து ஊழியம் புரிந்தார். இதில் ஒரு முறை நகரசபையின் உதவித் தலைவராகவும் தெரிந் தெடுக்கப்பட்டார். இந்த வகையில் முதலியார் அவர்கள் செய்த தொண்டுகள் பல உண்டு. மீளவும் கோவை நகர சபை கலைக்கப்பட்டகாலத்தில் இவர் அங்கத்தினராக அரசாங் கத்தார்களாலே நியமிக்கப்பட்டார். அந்த வகையில் 1945 முதல் 1947 வரை அலுவல் பார்த்தார். முதலியார் நகரசபை யில் அங்கம் வகித்த காலத்தில் தன்னால்கூடிய மட்டும் நிகழ்ச்சி களை நன்கு ஆராய்ந்து ஆலோசனை சொல்லுவார். கூட்டங் களில் தன் கொள்கைகளை வற்புறுத்துவார். பிறருடைய தாட்சணியத்திற்கு அடங்காமல் ஊராருக்கு நன்மை பயக்கக் கூடியவைகளையே சொல்லிச் செய்வார். எதார்த்தவாதி வெகு ஜன விரோதி என்றபடி இதனால் அவர் பலரது பகைமைக் கும் ஆளானார். ஆனால், அதனை பொருட்படுத்தாது தமது

கடனை ஆற்றுவார். இந்த வகையில் பல ஆண்டுகள் பொதுத் தொண்டு செய்திருக்கிறார்.

நகரசபையில் கல்விசம்பந்தமாக அரும்பாடு பட்டதன்றி உயர்தரக்கல்வி பெருக்கும் பொருட்டுப் பலதடவைகளிலும் பாடுபட்டார். 1922ம் ஆண்டில் கோவை நகர மன்றங்கள் சார்பிலே சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அதே கழகத்திலே நாட்டுப் பள்ளிகள் மன்றத்திற்கும் தெரிந்தெடுக்கப்பட்டார். இவ்விரு மன்றங்களிலும் 1925 வரை பதவி வகித்து ஒவ்வொரு கூட்டத்திலும் பல செய்திகளைப் பற்றிப்பேசியும் ஆலோசனை கூறியும் இருக்கிறார்.

முதலியார் அவர்களுடைய தமிழ் ஆராய்ச்சியை நன்கு அறிந்த அரசியலார் அவரை 1926லும் 1929லும் ஆக சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழிப் பிரதிநிதியாக இருமுறை நியமித்தார்கள். மாகாணத்திற்கே அந்த வகையில் தமிழ்மொழிச்சிறப்பிற்கு பல தொண்டுகள் புரிந்திருக்கின்றார்.

பல்கலைக் கழகத்தார் அனேக ஆண்டுகளாகப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, தமிழ்ப்பேரகராதி ஒன்றை இயற்றியுள்ளார்கள். அதற்குப் பல பேராசிரியர்களை நியமித்துப் பல நூறுபிரக்கணக்கில் செலவும் செய்திருக்கிறார்கள். இந்த அகராதி இயற்றுவதற்கு ஒரு ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதில் ஒரு சிறந்த அங்கத்தினராக முதலியார் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். தமிழ்ச் சொற்களுக்குச் சரியான பொருள் இதுதான் என்று முடிவுசெய்யும் தொழிலில் முதலியார் அவர்கள் மிகவும் பாடுபட்டிருக்கின்றார். தமது கருத்துக்களை ஐயம் திரிபு இன்றி எடுத்துரைத்திருக்கின்றார்.

பல்கலைக் கழகத்திலே அங்கத்தினராக இருந்தபோது அக்கழகத்தார் முதலியார் அவர்களைச் சேக்கிழாரைப் பற்றி மூன்று சொற்பொழிவுகள் இயற்றும்படி வேண்டிக் கொண்டனர். அதற்கிணங்கி 1930 ல் முதலியார் அவர்கள் மூன்று சொற்பொழிவுகளை அக் கழகத்தின் சார்பிலே இயற்றி

ஞர்கள். அவர்கள் இயற்றிய சொற்பொழிவுகளை வெளியிடும்படி கழகத்தார் ஆணை தந்தார்கள். அதன்படியே முதலியார் அவர்கள் " சேக்கிழார் " என்ற தலைப்பிலே ஒரு அருமையான வரலாற்று ஆராய்ச்சி நூல் வெளியிட்டிருக்கிறார்கள். இந்நூல் பின்னாலே தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன் பட்டது. இதனைப் பின்பற்றியே பல ஆராய்ச்சியாளர்கள் சேக்கிழார் வரலாற்றைக் குறித்து நூல்கள் எழுதியிருக்கிறார்கள். சேக்கிழார் காலத்தைப்பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள் கோவைகிழாரால் தொகுத்துக் கொடுக்கப்பட்டன. இந்நூல் மாணவர்களுக்குப் பாடபுத்தகமாகவும் பல ஆண்டுகளாக இருக்கின்றது.

முதலியார் அவர்கள் ஆராய்ந்து எழுதிய மற்றொரு வரலாற்று நூல் "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை" என்பது. இந் நூலும் தாம் செய்த ஒரு சொற்பொழிவைத் தழுவியே எழுதப்பட்டது. திருக்குறளிலே நீத்தார்பெருமை என்ற அதிகாரத்தை முன்னிட்டு அதில் உள்ள ஒவ்வொரு குறளுக்கும் மாணிக்கவாசகப் பெருமானுடைய வாழ்விலே ஒவ்வொரு பகுதி எடுத்துக் காட்டாகக்கொண்டு எழுதப் பெற்ற நூல் அதுவாகும். அந் நூல் தமிழிலேயே இது வரைக்கும் எழுதப் பெறாத நல்லமுறையில் எழுதப்பெற்றது. அதன் மேன்மையை அறிந்த பல்கலைக் கழகத்தார்கள் அதனை பி. ஏ. வகுப்புக்குப் பாடமாக வைத்துள்ளார்கள்.

மேலும் 1935 ல் முதலியார் அவர்கள் தம் வாழ்நாள் முழுதும் பாடுபட்டு ஆராய்ந்து வந்த திருத்தொண்டர் புராணம் என்கிற பெரிய புராணத்திற்கு ஒரு விரிவுரை எழுத வேண்டும் என்று கருதினார்கள். அக்கருத்தை நிறைவேற்ற எண்ணிய காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் அதற்கு ஆதரவு புரிய வாக்களித்தார்கள். அதன்பயனாக அக்கழகத்தார்கள் 1000 ரூபா உதவியும் தந்தார்கள். ஆகவே இவ்வரிய பெரிய செயலுக்கும் பல்கலைக் கழகம் முன்னின்று உதவி புரிந்தது. இவ்வுதவிகள் எதிர்பாராவகையில் கிடைத்தன. தான் பொதுமக்களுக்கு உதவிபுரியும் கடப்பாட்டுடன் நகரசபை, பல்கலைக் கழகம் முதலான மன்றங்களில் ஈடுபட்டார்.

கைம்மாறு ஒன்றும் கருதவில்லை. ஆனால் எதிர்பாராவகையில் நூல் வெளியீடுகளுக்கு உதவி கிடைத்தது. மக்கட்கு அந்த வகையிலும் பேருதவியாக இருந்தார்.

## 7. கோயிலும் சமயமும்

"ஒப்புரவினால் வருங்கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"

ஒப்புரவு செய்தலான் ஒருவனுக்குப் பொருங்கேடுவரும் என்பார் உளராயின், அக்கேடு தன்னை விற்றாயினும் கொள்ளுந் தகுதியை உடைத்து என்பது பொருள். ஒப்புரவு என்றால் உலக நடையினை அறிந்து செய்தல். உலக நடை அறநூல்களில் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மைத்தாகும். ஆகவே உலக நடையை அறிந்து செய்தலே நன்மக்களுடைய கடமை. அதனால் பொருள் கேடு உண்டாகும் என்பார் உண்டு. தன்னை விற்றாகிலும் உலக நடையைக் கொள்வது தகுதி என்றார் ஆசிரியர். கோயிற்பணி, சமயப் பணி, இவைகள் உலக நடையில் மிகவாய் வருவன. இவைகளில் ஈடுபடுவதால் உலகத்தோர்க்கு மிகுந்த நன்மை உண்டு. ஆனால் அவைகளில் ஈடுபடுபவர் பிறருடைய வசைவு மொழிகளுக்கும் குறை கூறுதற்கும் ஆளாவார்கள். அவைகளை சிறிதேனும் மதிக்காமல் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் ஈடுபடுதலே நன்று. சிலபேர் அவ்வசைவு மொழிகளுக்கு அஞ்சி இப்பணிகளை மேற்கொள்ளாமல் விட்டுவிடுவதுண்டு. மேலும் இப்பணிகளில் மிகுந்த கவலையும் பொருட்கேடும் வருவதுண்டு. முதலியார் அவர்களோ இக்கெடுதிகளைச் சிறிதேனும் பாராட்டாமல் வெகு வீரத்துடன் கோயில், சமயம் இவ்விரண்டு துறைகளிலும் பணி செய்து, வெற்றி அடைந்தவர். கோயமுத்தூர் தேவத்தானக் குழுவில் அங்கத்தினராக 1902 முதல் 1921 வரை முதலியார் அவர்கள் இருந்தார்கள் என்று முன்னமே கூறப்பட்டது. அந்தக் குழுவிற்குட்பட்ட பல கோயில்களின் முன்னேற்றங்களில் அவர் ஈடுபட்டிருக்கின்றார். சிறப்பாகக் கோவைக் கடுத்த திருப்பேரூர் கோயிலில் மிகவும்

பாடுபட்டிருக்கிறார். அக்கோயிலுக்குச் சேர்ந்த மாவுத்தம்பதி கிராமத்தின் நீர்க்கூலி சம்பந்தமாக அரசாங்கத்துடன் போராடி, கோயிலுக்கு உரிமை ஏற்படுத்தினார். கோயில் வாயிலில் இரும்புப்பெட்டி உண்டியல் வைத்து வருவாய் மிகுதிப்படுத்தினார். இனும் நிலத்தில் சர்வே செய்வித்து வருடம் 400 ரூ. வருவாய் தேடிக்கொடுத்தார். நடராசர் ஊன்றிய பாத உருவில் அமைத்துத்தந்தார். அழகிய சிற்றம்பலத்தை திருப்பணி செய்வித்தார். அரசம்பல வாணர் பெரு விழா ஏற்படுத்தினார். இவ்வாறு செய்கையில் சித்திரைத் திருவோண அபிஷேக சம்பந்தமாகப் பெரியதொரு வழக்கு ஏற்பட்டது. அதில் தான் முன்னின்று வழக்கு நடத்திக் கோயிலுக்கு வெற்றி அடைவித்தார். இதில் மூன்று நான்கு வருடங்கள் மிகச் சிரமத்துடன் பாடுபட்டார். பொருட்கேடு வந்ததையும் பாராட்டாது இரவும் பகலும் பாடுபட்டது மக்கள் அறிந்த செய்தி. கோயிலுக்குச் சேர்ந்த ஒரு இடத்தில் ஒருவர் ஒரு தபோவனம் கட்டியிருந்ததில் அதனைச் சிலர் கவர்ந்தது பற்றிக் கண்டித்து நீதிமன்றத்தில் அதனைக் குறித்துப் பொது மக்களின் சார்பில் வாதாடி யுள்ளார். இவ்வாறு உடல் சிரமமும் மனோசிரமமும் பாராட்டாது கோயில்களின் மேன்மையே கருதிப் பல ஆண்டுகள் உழைத்திருக்கிறார்.

மேலும் தேவத்தானக் குழுவிற்கு உட்பட்ட காரைமடைப் பெருமாள் கோயில் சம்பந்தமாகவும் பலவிதத்திலும் பாடுபட்டிருக்கிறார். முன் 50 ஆண்டுகளாக தேவத்தானக் குழுவிற்கு உட்படாமல் தன்னிச்சையாக வேலை செய்து கொண்டிருந்த தருமகர்த்தர்களைக் குழுவின் ஆளுகைக்குள் கொண்டுவந்து குறிப்பிட்ட திட்டத்தின்படி வேலை செய்யும்படி ஏற்பாடு செய்தார். இந்த முயற்சியினால் வந்த பகையை அவர் ஒரு சிறிதும் பாராட்டவில்லை. அந்தக் கோயிலுக்குத் தங்கப் பிரபாவளி (5000 ரூ.) புதுத்தேர் (15000) ஆழ்வார்கள் (1000 ரூ.) இவைகளை ஏற்பாடு செய்து ரொக்கப்பணமாக 7000—ம் மீதிப்படுத்தினார்.

1930 ல் பேச்சிமுத்து இரங்கசாமிக் கவுண்டர் உயில் சாசனப்படி சத்திரம் ஒன்று கட்டி அதன் பரிபாலனத்தில் தலைமை வகித்து அதனைப் பொது மக்களுக்குப் பயன்படுத்தி வருகிறார். அது யாத்திரிகர்களின் இருக்கைக்கும் திருமணங்கள் நடக்கைக்கும் மிகவும் பயன் படுகின்றன.

1940 ல் பேரூர் அரசம்பலவாணர் கோயில் கும்பாபிஷேகமும், பட்டீசுவர் கோயிலில் அறுபத்துமூவர் கும்பாபிஷேகமும், 1942ல் பச்சை நாயகியம்மன் சஷ்டியப்த சாந்நித்திய கும்பாபிஷேகமும், 1943 ல் அழகிய சிற்றம்பலம் சாந்நித்திய கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தார்.

இனி கோவை தேவஸ்தானக் கமிட்டிக்கு உட்படாத ஏனைய ஆலயங்களிலும் ஈடுபட்டிருக்கின்றார். எந்தப் பெரிய ஆலயத்திற்கும் கும்பாபிஷேகம் என்றால் முதலியார் அவர்களை அழையாதவர்கள் இல்லை. அங்கே நடைபெற வேண்டிய வைதீகச் சடங்குகளுக்கு எல்லாம் முதலியாரை அழைத்து அவரது ஆலோசனைகளைக் கேட்டே அவைகளைச் செய்வார்கள். சிறப்பாகப் பழனியில் நடந்த இரண்டு பெரிய கும்பாபிஷேகங்களிலும் முதலியாரே சிறப்பாக இருந்து சடங்குகளை நடத்திவைத்தார். திருச்செந்தூர் திருநெல்வேலி முதலிய பெரிய கோயில்களின் கும்பாபிஷேகங்களுக்கும் இவர் அழைக்கப்பட்டுச் சென்றிருந்து சிறப்பாக நடத்திவைத்தார். தருமபுரம் திருவாவடுதுறை திருப்பனந்தாள் முதலான பெரிய சைவ ஆதீனங்களிலும் முதலியாருக்கு மிகுந்த மதிப்பு உண்டு. அங்கங்கே நடைபெறும் சடங்குகள் திருவிழாக்கள் முதலியவைகளுக்கு முதலியாரை அழைத்து வேண்டியவைகளை ஆலோசித்துச் செய்வார்கள். திருவாரூர் சிதம்பரம் காஞ்சி முதலிய பெரிய தலங்களிலும் நடந்த பெருந்திருவிழாக்கள் சடங்குகள் இவைகளில் முதலியார் அவர்கள் கலந்து கொண்டதுண்டு. இவ்வித விழாக்கள் நடைபெறுகின்றன என்றால் தங்கள் சொந்த வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு அப்பணிகளிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்.

1935 முதல் திருவஞ்சைக்களத்துச் சுந்தரர் சேரமான் நாயன்மார்களின் ஆடி சுவாதி திருநாள்களை நடப்பிப்பதில்



சிவக்கவிமணி அவர்கள் தமிழாசிரியர்

பண்டிதர்-ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள்

1904



சிவக்கவிமணியார் தந்தையார் கோயமுத்தூர்

மகாவித்துவான் கந்தசாமி முதலியார் அவர்கள்

1838—1890

நன்கு சிரமம் எடுத்துக்கொண்டு நடத்தி வருகிறார். மலையாள நாட்டில் கொச்சி சீமையில் சுந்தரமூர்த்திகளின் பெயரையே கேளாமல் இருந்த ஒரு நிலைமையை மாற்றி நிரந்தரமான உற்சவமாக்கியும் படித்தரம் ஏற்படுத்தியும் நூல் எழுதுவிக்க முயற்சி செய்து மகாநாடுகளை நடப்பிக்கச் செய்தும் தற்போது ஒரு நினைவுச் சின்னம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தும் இன்னும் பல முறைகளிலும் அவ்வூர்த் திருக்கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கிறார். இவ்வாறு திருக்கோயில்களுக்குத் தமிழ் நாட்டில் செய்வித்த திருப்பணிகள் அளவிறந்தன.

## 8. பாட்டும் உரையும்

"சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

சொற்களில் பயனுடைய சொற்களைச் சொல்லுக, சொற்களில் பயனில்லாத சொற்களைச் சொல்லாது ஒழிக என்பது உரை. இதன்படி சொற்கள் பயனுடையவையும் பயன் இலாதவையும் என இருவகைப்படும். அவைகளிலே பயனுடைய சொற்களைச் சொல்லுதலே நன்மைதரும். பயன் தருவது எதற்கு என்ற கேள்வி பிறக்கிறது. உடலுக்குப் பயனா உயிருக்குப் பயனா என்று கேட்கலாம். தற்காலக் கலைஞானங்கள் உடலுக்கே பயன் தருவன. முற்காலத் தமிழர்கள் உயிருக்குப் பயன் தருவனவற்றையே போற்றினார்கள். உடலுக்குப் பயன் தருவனவற்றிலும் உயிருக்குப் பயன் தருவனவே சிறப்புடையன என்று கூறவும் வேண்டுமா? தமிழிலேயும் சமயப் பற்றில்லாத நூல்கள் உடலுக்குப் பயன் தருவன. சமய சம்பந்தமான நூல்களோ உயிருக்குப் பயன் தருவன. நமது முதலியார் உயிருக்குப் பயன் தருவனவற்றையே தெரிந்தெடுத்து அவைகளைப் போற்றினார். சைவத்திலே ஈடுபட்டு அதில் காணும் நூல்களை ஆராயத் தொடங்கினார். சைவத்திற்கு உறுதி நூல்களாகிய பன்னிரண்டு திருமுறைகளை நாடோறும் ஓதியும் பதினான்கு சாத்திரங்களை ஆராய்ந்தும் வந்தார். இந்த முறையில் பன்னி

ரண்டு திருமுறைகளை ஒரு ஆண்டுக்கு ஒருமுறை முற்றும் ஓதிவருவார். இந்த முயற்சியில் சிறிதேனும் வழுவாதவர். பதினன்கு சாத்திரங்களையும் நன்கு ஆராய்ந்து ஐயம் திரிபு அற உணர்ந்திருக்கின்றார். ஆகவே தாம் பிறருக்குச் சொல்லு வதிலும் இதனையே பின்பற்றி வந்திருக்கிறார்.

பயனுள்ள சொற்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்வது என்று முறைப்படுத்திக் கொண்டு சமயக் கருத்துக்களையே எழுதவும் பேசவும் தொடங்கினர். எழுதுவதில் ஆழ்ந்த கருத்துக்களை அழகிய பாடலில் அமைத்துச் செய்யுள் இயற்றி யும் உறுதி தரத்தக்க சமயப் பகுதிகளைத் தெளிவான உரை நடையில் புகுத்தியும் எழுத வல்லவர். அந்த முறையில் சலிக்காமல் பொது மக்களுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறார்.

பள்ளி மாணவனக இருந்த பொழுதே செய்யுள் இயற்று வதில் வல்லவர் என்று முன்பே கூறப்பட்டது. பட்டத் தேர்தலிலே மொழி பெயர்ப்பிலேயே செய்யுள் இயற்றினர் என்று சொன்னேம். தமது ஆசிரியர் திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் எழுதிய தேசிய நூல்களில் செய்யுட் பகுதி கள் இவரே தொகுத்தவை. பிற்காலத்தில் சாற்றுக் கவி களாக நூற்றுக்கணக்கில் எழுதியிருக்கிறார். முழுநூலாகச் செய்யுள் ஆக்கியது அவிநாசி கருணம்பிகைப் பிள்ளைத் தமிழ் ஆகும். இதனை இயற்றி 1923-ல் அவிநாசி ஆலயத்தில் திரு. கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் அவர்கள் தலைமையில் அரங்கேற்றினர். திருப்பேரூரைப் பற்றிப் பல சிறு பிரபந் தங்கள் இயற்றியுள்ளார்.

பட்டுப்பூச்சிக்கும் கைக்கடியாரத்துக்கும் சிலேடை

இவர், 40 ஆண்டுகளின் முன் சேலம் கங்கைவல்லி யில் உள்ள தமது மாமனர் வீட்டிற்குக் கோடை விடு முறையில் சென்றிருந்தபோது அங்கு நாற்காலியின்மேல் ஒரு கண்ணடி அலமாறியில் இருந்த பட்டுப்பூச்சிகள் பலவகை வன்னங்களை யுடையனவாய்க் கண்காட்சிக்காகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் ஒரு கைக்கடியாரம் இருந்தது. இவரது மைத்துனர் இவரது கல்வித் திறமையைப்

பற்றிப் பரிகாசமாக அவற்றைக்காட்டி இந்த இரண்டிற்கும் சிலேடைக் கவி பாடுங்கள் என்று கேட்க உடன்பாடிய வெண்பா,

காலமெல் லாம்பறக்குங் கட்டுதோற் சட்டையுறும்
ஏலும்பூப் பல்வகையா லிங்கியலும்— * * *

**கடியாரம்** - காலமெல்லாம் ஓடும்: தோற்சட்டைப் பைக்குள் பொருந்தும்: உலகில் பற்சக்கரங்களால் இயங்கும்.

**பட்டுப் பூச்சி** - எந்நேரத்திலும் பறக்கும்: புழுவாயிருந்த நிலையில் தானே கட்டியதோற் கூட்டினுள் யோகிருந்து பட்டுப்பூச்சியாக வெளிவரும்: பூக்களில் பலவர்ண பேதங்களுடன் பலவகையால் இயலும்.

இயற்றிய நூல்கள் எல்லாம் சமய சம்பந்தமானவைகளே. செய்யுளை அழகாகச் சுவைபட இயற்றும் ஆற்றல் இருந்த போதிலும் அவைகளால் மக்களுக்கு மிகுந்த பயன் தற்காலத்தில் இருக்க முடியாது என்று எல்லாருக்கும் எளிதில் அறியக் கூடிய உரைநடையே பெரும்பாலும் விரும்பி எழுதத் தொடங்கினர்.

உரை நடையில் இயற்றிய நூல்களில் சிலவற்றை முதலிலேயே குறித்துள்ளோம். அவைகளிலே சேக்கிழார் வரலாறு ஒரு ஒப்பற்ற நூலாகும். திருத்தொண்டர் புராணத்தின் மேன்மைகளை ஆராய்ச்சி முறையில் அந்நூல் விளக்கிக் காட்டும். 'மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை' என்ற நூல் சைவ சித்தாந்த உண்மைகளை வெகு தெளிவாக எடுத்துக் காட்டுவது, திருவாசகத்தின் ஒப்பற்ற மணிகளைப் பொறுக்கி எடுத்து விளக்குவது ஆகும். அவரது வாழ்க்கையைத் திருக்குறளின் எடுத்துக்காட்டு என்று நிரூபிக்கும் முறை மிகச் சிறந்தது என்று முன்பே கூறியிருக்கிறோம்.

இனி கருவூர்த்தேவர் வரலாறு மற்றொரு ஆராய்ச்சி நூலாகும். இந்நூலில் திருவிசைப்பா அருளிய கருவூர்த் தேவரின் வாழ்க்கையும் அவர் உலகிற்கு அளித்த பதிகங்களில் காணும் அருமையான கருத்துக்களையும் வெகு தெளிவாக உரைத்திருக்கின்றார். இந்நூலுக்கு ஒரு விரிவான

முன்னுரை கோவைகிழாரால் எழுதப்பட்டுள்ளது. அதில் திருவிசைப்பா பெற்ற சில தலங்கள் கொங்கு நாட்டில் உள்ளன என்று விளக்கப்பட்டுள்ளது.

இவைகளையன்றி அனேக சிறு நூல்களையும் இயற்றியுள்ளார். பல இடங்களில் பேசிய பேச்சுக்களை சிறு கட்டுரைகளாகவும் எழுதி வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் மிகச் சிறந்தது அர்த்தனாரீசுவரர் அல்லது மாதிருக்கும் பாதியன் என்ற கட்டுரை. இது திருச்செங்கோட்டில் சைவ சித்தாந்த சபையில் பேசிய பேச்சின் சுருக்கம் ஆகும். இந்த முறையில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தூத்துக்குடி, சாத்தூர், தருமபுரம் முதலிய இடங்களில் நடந்த கூட்டங்களில் தலைமை வகித்துப் பேசிய காலங்களில் சொன்ன கருத்துக்களும் வெளிவந்துள்ளன. சைவ சித்தாந்த சமாசத்தின் ஆண்டு விழாவில் குன்னக்குடியில் பேசிய தலைமை உரையும் அச்சாகியிருக்கின்றது.

மேலும் சித்தாந்தம், கொங்குமலர், செந்தமிழ்ச் செல்வி முதலிய திங்கள் வெளியீடுகளில் அடிக்கடி பல கட்டுரைகளை வெளியிட்டிருக்கின்றார். அவைகளை யெல்லாம் தொகுத்து வெளியிட்டால் ஒரு பெரும் நூல் ஆகும்.

## 9. பேச்சும் வீச்சும்

" சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
யிகல்வெல்லல் யார்க்கும் அரிது "

தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கேற்ப சொல்லுதல் வல்லனாய் அவை மிகப் பலவாய வழி ஒன்றினும் சோர்விலனாய், அவைக் கஞ்சானாயினான் யாவன், அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது. உலகில் வெற்றி அடைவதற்கு எழுத்து மட்டும் போதாது, பேச்சிலும் வல்லவனாய் இருத்தல் வேண்டும். அப்பேச்சும் பிறர் ஏற்கும் தெளிவு உடைத்தாய் இருத்தல் வேண்டும். பேசும்போது சோர்வு அடைதல் கூடாது. அவைக்கு அஞ்சாமையும் வேண்டும். இப்படிப்பட்ட தன்மைகளே வெற்றி தருவன.

இவைகள் எல்லாம் முதலியாரிடம் உண்டு. கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லுவார். பல உதாரணங்களைக் கூறிச் சொல்லுவார். செய்யுள்களை விளக்கும் போது பதவுரை பொழிப்புரை சொல்லிக் காலத்தைப் போக்காது முதலில் கருத்தை மட்டும் பல உதாரணங்களைச் சொல்லித் தெளிவு படுத்திவிட்டுப் பிறகே செய்யுளைச் சொல்லுவார். செய்யுளையும் இனிய இசையுடன் கூறுவார். இந்த வகையில் பேச்சு மிகவும் தெளிவாக இருக்கும். எத்தனை நேரமாயினும் சோர்வின்றிப் பேசுவார். இந்த முறையில் இவர் பேச்சு வீச்சுக் கொண்டு மிளிரும்.

பேச்சில் வல்லமை, கருத்தில் முதிர்ச்சி சைவத்தில் ஆழம் இவைகள் ஒருங்கு சேர்ந்து இருந்தபடியால் முதலியார் அவர்களைப் பல சபையினரும் அழைத்தார்கள். பேச்சு பேசுவதற்கும் அதைக்காட்டிலும் தலைமை வகித்தற்கும் அன்னாருக்கு அடிக்கடி அழைப்பு வரும். இந்த வகையில் தமிழ்நாடு முழுமையும் சென்றதன்றி ஈழ நாடு சென்று புகழ் பெற்றிருக்கின்றார். சென்னை முதல் நெல்வேலி வரைக்கும் தஞ்சை முதல் மலையாளம் வரைக்கும் தமிழ்நாடு முழுதும் பலமுறை சென்று கூட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றார். தமிழ், சைவம் இரண்டுவித கூட்டங்களிலும் அவர் கலந்து கொண்டதுண்டு. சைவ சித்தாந்த சமாசம், தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை, நெல்லைச் சபை, செட்டி நாட்டுச் சபைகள், தஞ்சைச் சபைகள், சேலம் சில்லாச் சபைகள், காஞ்சி, சென்னைச் சபைகள் இவைகள் பலவற்றிலும் தலைமை வகித்துப் பேசியிருக்கிறார். பல உரைகளும் அச்சு ஆகி இருக்கின்றன. மேலும் ஆலயங்களை ஒட்டிப் பல திருவிழாக்களிலும் தலைமை வகித்தும் பேச்சுக்களைப் பேசியும் விளக்கி இருக்கின்றார். பல கலாசாலைகளிலும் பெருஞ் சொற்களைக் கூறியிருக்கின்றார். இவருடைய பேச்சில் மாணவர்களுக்கு மிகுந்த விருப்பம். ஈழநாட்டில் இவர் மும்முறை அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் நடந்த அகில இலங்கை இந்து மகாநாட்டில் இருமுறை தலைமை வகித்திருக்கின்றார். மற்றொரு முறை இளைஞர் சங்கத்தின் சார்பில் நடந்த அகில இலங்கைச் சமய மகா

நாட்டில் தலைமை வகித்திருக்கிறார். இருமுறை இவர் கோவை கிழாரை உடன் அழைத்துச் சென்றிருக்கிறார். இருவருமாக யாழ்ப்பாணக் கிராமங்கள்தோறும் சென்று பல சொற் பொழிவுகளை நிகழ்த்தி இருக்கின்றார்கள். கொழும்பில் விவேகாநந்தர் சபையிலும் பேசி இருக்கிறார்கள். முதன் முறை தமது மனைவியோடு இலங்கை சென்ற காலத்தில் வடக்கே காங்கேயன்துறை முதற்கொண்டு தெற்கே கதிர் காமம் மட்டும் யாத்திரை புரிந்துகொண்டும் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டும் சென்றிருக்கிறார். இந்த வகையில் ஈழ நாடு முழுதும் இவருடைய புகழ் பரவி இருக்கிறது. பலபேர் அறிஞர்கள் இலங்கை சென்றிருந்தபோதிலும் இவர் ஒரு வருக்குமட்டும் சைவப்பெரியார் என்ற விருதுடன் அந் நாட்டார் பாராட்டுவார்கள்.

செய்யுள் இயற்றுவதிலும் சைவ உண்மைகளை எடுத்துச் சொல்லுவதிலும் சொற்களை ஆராய்ந்து வெளியிடுவதிலும் மிக்க வன்மை முதலியாரிடம் இருப்பதை அறிந்து சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் இவருக்கு "சிவக்கவி மணி" என்ற ஒரு பட்டம் சூட்டியிருக்கிறார்கள். சென்னையில் சிந்தாதிரிப்பேட்டை உயர்தரக் கல்விச் சாலையில் நடந்த விழாவில் திரு. இலங்கை நடேச பிள்ளையவர்கள் தலைமையில் இந்தப்பட்டம் முதலியார் அவர்களுக்குச் சூட்டப்பட்டது. அது முதல் அந்தப்பட்டப் பெயராலே அவர் அழைக்கப்படு கிறார். அவர் இயற்பெயருக்குத் தக்கபடி பட்டப்பெயரும் அமைந்திருக்கக் காணலாம். சி. கே. சுப்பிரமணியனார் என்பதை, சிவக்கவிமணி என்றால் பொருத்தமாக இல்லையா?


## 10. பேருரையும் பெரும்புகழும்

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு"

வறியார்க்கு ஈக, அதனாற் புகழுமுண்டாக வாழ்க, அப் புகழ் அல்லது மக்கள் உயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை யாகலான். இங்கே வறியார் என்போர் பொருள் இல்லோர்



சென்னை அரசாங்கக்கல்லூரியில்
பி. ஏ. வகுப்பில் படித்தபோது
எடுத்த படம் (வயது 19)
1899



உறவினர் கூட்டத்துடன்
எடுத்த படம்
1928



பழனிச் சைவ சித்தாந்த
சபைத் தலைமை
1942

மட்டும் அல்லர். கல்வி இல்லோர், அறிவு இல்லோர், அருள் இல்லோர், சமய உணர்வு இல்லோர் முதலானவர்களும் ஆவார்கள். இவர்களுக்கே அவை உள்ளோர் அப்பொருள்களை ஈதல் வேண்டும். அவ்வகை ஈதலாலே புகழ் உண்டாகும். அப்புகழால் மக்கள் உயிர்க்கு அது தோன்றியதன் பயன் உண்டாகும். ஆகவே உலகில் பிறந்ததன் பயனாக கல்வி இல்லோர்க்குக் கல்வியாளர் கல்வி தரல்வேண்டும். அறிவில்லோர்க்கு அறிவு தரல்வேண்டும் சமய ஞானம் இல்லோர்க்குச் சமய ஞானம் உள்ளோர் அதனைத் தரல்வேண்டும். இதுவே சிறந்த ஈகை, இதுவே சிறந்த புகழ். இந்தக் கைங்கரியத்தில் மிகவும் ஈடுபட்டவர் சிவக்கவிமணி யாவார்.

சமய ஞானம் ஈவதற்கு எது சிறந்த முறை என்று ஆராய்ந்தார் சிவக்கவிமணி அவர்கள். தமக்குமுன்னே பல பெரியார்கள் இந்த முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் அல்லவா? பல ஆண்டு கோவையில் எழுந்தருளியிருந்து சமய ஞானத்தை ஊட்டிய பெரியார் சதாசிவம் செட்டியார் அவர்கள் எந்த முறையைக் கையாண்டார்கள். அதுதான் சரியான முறை அல்லவா? பெரிய புராணத்திற்கு விரிவுரை இயற்றுதலே சமயஞான ஈகை என்று செட்டியார் காண்பித்துள்ளார். செட்டியார் தன் அரிய பெரிய உரையை விளக்கிக்கொண்டிருந்த காலத்தில் அவரது அருகிலேயே இருந்துகொண்டு செய்யுளை அழகாக இன்னிசையோடு ஓதியும் உரைக்குறிப்புக்களை எழுதிக்கொண்டும் இருந்தவர் சிவக்கவிமணி அவர்கள். அவ்வாறு மூவாண்டு எழுதிய உரைக்குறிப்புக்களை வைத்துக்கொண்டு தானும் தன் ஆராய்ச்சியில் கண்ட பொருள்களை சேர்த்துக்கொண்டு முதலியார் அடிக்கடி பெரியபுராண விரிவுரை நிகழ்த்துவார்கள். செட்டியாரோ தம் ஆராய்ச்சிகளை வெளியிடாமல் சிவபதம் ஏகிவிட்டார். அப்படி ஆராய்ச்சி உரைகள் வீண் ஆகிப்போகவிட முதலியாருக்கு மனம் வரவில்லை. கூடிய மட்டில் உரைகளை எழுதி வெளியிடவேண்டும் என்பது அவரது கருத்து. அதனை எண்ணி எண்ணி முடிவில் பெரியபுராண விரிவுரை எழுதி விடுவது என்று தீர்மானித்தார். அதற்கு ஆதரவும் கிடைத்தது.

1934 ல் உரை எழுதத் தொடங்கினார். சஞ்சிகையாக எழுதி வெளியிடுவது என்று தீர்மானித்தார். சஞ்சிகைகள் சாது அச்சகத்தில் அச்சடிக்கப்பெற்றன. முதல் சஞ்சிகை சிதம்பரத்தில் வெளியிடப்பட்டது. அது முதல் இன்றுவரை ஓய்வின்றி அப்பேருரை சஞ்சிகைகளாக வெளி வருகின்றன.

பெரியபுராணத்தின் பழைய பிரதிகள் எல்லாவற்றையும் தேடி எடுத்து அவைகளில் கிடைக்கும் பாட பேதங்களை எல்லாம் காட்டி மூலம் வெளியிடப்படுகிறது. மிகப் பழைய ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு அப்பாட பேதங்கள் ஆராயப் படுகின்றன. உரை மிகவும் தெளிவாக எழுதப்படுகிறது. குறிப்புரைகளும் விரிவுரைகளும் எழுதப்படுகின்றன. நயம், உட்குறிப்பு, அருமைப் பாடுகள், மேற்கோள்கள், அணிகள் முதலியவைகள் ஒன்று விடாமல் குறிக்கப்படுகின்றன. ஏனைய பெரியோர்கள் கருத்துக்களை வெளியிடுவதுடன் இலக்கணம் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளுடைய குறிப்பு களுடன் அவரது மேற்பார்வையில் வெளியீடு தரப்படுகிறது. சரிதக் குறிப்புகள், ஆராய்ச்சிகள், கல்வெட்டுக் குறிப்புகள், விவரப் படங்கள், தலக்குறிப்புகள் முதலியவைகள் எல்லாம் தக்கோரால் பெறப்பட்டு சேர்க்கப்படுகின்றன. அட்டவணை முதலியவைகள் மிக விவரமாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. பெரியபுராணத்தை விளக்குவதற்கு என்னென்ன சிறப்புகள் வேண்டியிருக்குமோ அவைகள் எல்லாம் ஒன்றுவிடாமல் அடங்கியிருக்கின்றன. இவ்வித பெருமுயற்சி இதுவரை எவரும் செய்யவில்லை என்பது மிகையல்ல. இப்படிப்பட்ட பேருரை உலகிலேயே எந்த நூலுக்கும் இல்லை என்றே கூற லாம். அந்த முறையில் இந்த பெரும் முயற்சி எடுத்து ஆராயப் படுகின்றது.

1935 ல் தமது 56 வயதில் தொடங்கிய இப்பேருரை 1948 ல் தமது 70 வது ஆண்டில் முடிவுபெறுகிறது. இது வரை 24 புத்தகங்களாக வெளிவந்துள்ளன. இனி அச்சாக வேண்டியது 1750 பாடல்களுக்கு உரை. அதுவும் எழுதி யாகிவிட்டது. இந்தப் பணமுடை காலத்தில் பணத்தைப்

பெற்றும் காகித முடைக் காலத்தில் காகிதம் பெற்றும் அச்சு முடை காலத்தில் அச்சிடச் செய்தும் செய்யற்கரிய செயலை செய்ய வல்ல பெரியார் வேறு எங்கு உளர். இதனால் உலகிலேயே விளங்கிக்கொண்டிருக்க வல்ல பெரும் புகழை சிவக்கவிமணி அவர்கள் பெற்றிருக்கிறார்கள் அல்லவா? அவர் முயற்சி 1948 ஜூலை 12-ல் சிதம்பரத்தில் பெரும் புகழோடு கூத்தாடுவோன் திருவடிநீழலில் நிறைவுபெறுகின்றது என்று உலகம் பேரின்பம் உறுகின்றது.

## 11. உடலின் மென்மையும் நெஞ்சின் திண்மையும்

"வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்"

வெள்ளம் போலக் கரையிலவாய இடும்பைகளெல்லாம் அறிவுடையவன் தன்னுள்ளத்தான் ஒன்றனை நினைக்க அத்துணையானே கெடும் என்பது அதன் கருத்து. உயிருக்கு ஆபத்தான இடும்பைகள் நேரிடினும் உள்ளத்தின் உறுதியாலே தக்க உபாயங்கள் கொண்டு அவைகளைப் போக்கிவிட முடியும். உடலினால் ஆகாதவைகளை உள்ளத்துறுதியால் நீக்க முடியும். அதனால் மெல்லிய உடலுக்கும் உறுதி உண்டாக்கும். இதனை சிவக் கவிமணியின் வாழ்க்கையில் காண முடியும்.

அவருடைய உடல் மெல்லியது. இளவயதிலேயே தந்தையாரை இழந்ததினால் அவ்வுடலுக்கு ஆதரவு குறைந்திருக்கும். சிறிய உருவம், மெல்லிய உடல்; தவறாத நோன்புகளால் பருமன் அடையவில்லை. வழிபாடு முடிந்த பிறகு உணவு ஏற்கும் ஒழுக்கத்தைக் கொண்டதனால் பட்டினி வருத்தம் ஏற்படும். கொள்ளும் உணவும் மிகக் குறைவே. விருந்து, அடியார் வரவு, திருநாட்கள் இவை வந்துவிட்டால் உணவு பெறும் பொழுது மாறிவிடும். உணவு அருந்துதலில் இத்தனை ஒழுங்கீனங்கள் ஏற்பட்டால் உடல் திண்மை ஆவது எப்படி? மேலும் தொழில், வழிபாடு, ஓதுதல், ஓதுவித்தல் முதலிய செயல்கள் நாடோறும் கூடிக்கொண்டு வந்தால் ஓய்

விற்கு நேரம் எங்கே. ஓய்வு இல்லாமல் போக உடல் பயிற்சி விளையாட்டு முதலியவைகள் சின்னஞ் சிறு வயதிலிருந்தே இல்லை. இந்த முறையில் இவரது உடல் எவ்விதமாக வலிமை அடையும்.

உடல் சிறியதாயினும் தோற்றம் கம்பீரமானது. கண் மிகக் கூர்மையானது. அறிவு ஒளிபெற்று விளங்குவது. எந்தக் காலத்திலும் இடைவிடாதபடி படிப்பதும் எழுதுவதும் தன் தொழிலாக வைத்துக் கொண்டிருந்தும் கண் சிறிதேனும் மழுங்க வில்லை. இன்றைக்கும் மிக வயது தளர்ந்திருந்தும் இதுவரை மூக்குக் கண்ணாடி அணிந்தவர் அல்லர். மன உறுதி கண்ணாடியை விலக்கி விட்டது. வீட்டிலும் இரவுப் பொழுதுகளில் எண்ணெய் விளக்குகளை வைத்திருப்பாரே யன்றிச்சமீப காலம் மட்டும் மின்சாரத்தை வைக்க மனம் இடம் தரவில்லை. எழுதும்போதும் பெரும்பான்மையாக இறகு எழுதுகோலையே வைத்து எழுதுவார். இவ்வழக்கங் கள் பண்டைக் காலப் போக்குதான். ஆனாலும் அவைகளே இவருக்கு நன்மை தந்தன. நன்மை தருபவை எவையாறு லும் என்ன? அவைகளைக் கையாளுவதில் என்ன தப்பு.

இவருடைய பழக்க வழக்கங்கள் ஒரே முறையாக எப் போதும் இருந்தன என்றாலும் உடல் மெலிவினாலோ அல்லது ஊழ்வினையாலோ பல இடம்பைகள் தோன்றின. அவைகள் எவ்வாறு ஒழிந்து போயின என்பதற்கு மேற் கூறிய குறளே சான்று தரும்.

1901-02-ல் சென்னையில் படிக்கும் காலத்திலேயே உடல் மெலிந்து இருமல் நோய் உண்டாயிற்று என்று முன் னமே கூறப்பட்டது. அதனை டாக்டர் நாயர் நன்றாக்கி விட் டார். பிறகு 1904-ல் விரை வீக்கம் தோன்றி காய்ச்சல் 107 வரை ஏறிற்று. ஒருநாள் முழுதும் உணர்வு இழந்திருந்தார். காலதூதர் காட்சியும் தண்டபாணி பிரம்பும் கொண்டு விரட்டி னதும் தோன்றின. பெருமான் அருளினால் நோய் நீங்கிச் சுகம் அடைந்தார்.

1931 ல் மூக்கில் பரு கண்டு முகம் எல்லாம் வீக்கம் அடைந்து விகாரப்பட்டது. இரணசிகிச்சைக்கும் வகை இல்

லாமல் போய்விட்டது. ஒருநாள் நினைவும் இழந்துவிட்டது. இறைவன் வழிபாடும் விண்ணப்பமும் அன்றி வேறு வழி தோன்றவில்லை. இப்படியிருக்க ஒருநாள் பரு தானே உடைந்து சீழ் வெளிவந்தது. அதுமுதல் குணம் ஏற்படத் தொடங்கி உயிர் பிழைத்தது. 1938 - ல் கழுத்தின் மேல் தலையின் பின்புறம் அடிப்புறத்தில் ஒரு பிளவைக்கட்டி தோன்றியது. பல புண்கள் அதில் தோன்றின. ஆங்கிலச் சிகிச்சை செய்துகொள்ள மனம் இடம் தரவில்லை. இரண சிகிச்சை இல்லாத ஹோமியோபேதிக் என்ற முறையில் ஒரு நண்பர் மருத்துவம் செய்தார். இந்தவகையில் கட்டி உடைந்து உடம்பு குணம் ஆயிற்று. பிறகு 1947 ல் மற்றொரு ஆபத்தான நிலைவந்தது. மாசி பங்குனியில் சாதகப்படி இறுதி வாய்க்கக்கூடிய கோள்கள் வந்தன. அப்போது பலவகையிலும் பொல்லாத இடும்பைகள் தோன்றின. தொல்லைகளுக்கோ அளவில்லை. தவறாமல் செய்து வந்த பங்குனி உத்திரத் திருவிழாத் தரிசனமும் காணமுடியவில்லை. அப்பொழுது பட்டியப்பருக்கு ஸ்ரீருத்திரம் செபிக்கச்செய்து அக்கினி காரியத்துடன் அபிஷேகமும் முருகக்கடவுளுக்கு ஆறு நாட்கள் உருத்திர செபமும் திரிசதை அர்ச்சனையும் செய்வித்தார். உடல் மெலிவும் நோயும் நீங்கியது. இவ்வாறு நெஞ்சின் உறுதியால் பல இடுக்கண்களையும் தப்பி வாழ்ந்தார்.

தனக்கு மட்டும் அன்று. தன் மனைவிமார்களுக்கும் தோன்றிய இடுக்கண்கள் தாங்கள் கொண்ட மன உறுதியினாலே விலக்கப்பட்டன.

அவருடைய முதல் மனைவி 1915 ல் மிக்க நோய் கொண்டு வருந்தினாள். மருத்துவரும் கைவிட்டார். ஆனால் தமது தீட்சாகுருவின் ஆணைப்படி திரு உருத்திரம் அக்கினி காரியத்துடன் அபிஷேகம் திருப்பாவாடை முதலியசடங்குகள் இயற்ற உயிர் தப்பியது. ஆகையால் அந்த அம்மாளை ஒரு வருடம் உயிர்காத்தன. பிறகு 1945 ல் இரண்டாம் மனைவிக்கு வலி நோய்கண்டது. கைகால் வீக்கமும் வயிற்றுப்போக்கும் கண்டன. அப்போது பத்து நாட்கள் திரு உருத்திரமும் முருகக் கடவுளுக்கு நித்தம் பதினொரு பேர் செபமும் செய்

யப்பட்டன. அபிஷேக வழிபாடுகளும் நடத்த 10 நாட்களில் குணம் வந்தது. கைவிடப் பட்ட நிலை நீங்கி 10ம் நாள் தாமே நடந்து சென்று நடராஜ திருவீதிவிழாவைக் காணச் செய்தது. இந்த வகைகளில் மன உறுதியினால் இடுக்கண்களைக் களைந்தார்.

1938 ல் 60 ஆண்டு நிறைவு வரவே திருக்கடவூரில் திருவிழா நடத்தினர். பல பேர் வாழ்த்துக்கள் கூறினார்கள். கோவை கிழார் குருவி விடுதூது ஒன்றை இயற்றி வாழ்த்தினார். 1948 ல் எழுபதாவது ஆண்டு நிறைவுவிழா திருப்பேரூரில் பட்டீசப்பெருமான் சந்நிதியில் நடந்தது. அந்த ஆண்டாகிய இந்த ஆண்டில் பெரியபுராண பூர்த்திவிழாவும் நடைபெறுவது இறைவனுடைய அருளே என்று கூற வேண்டும். தான் எடுத்துக்கொண்ட அரிய பணியாகிய பெரியபுராண விரிவுரை தானே முடிவு செய்யவேண்டும் என்ற பேரவா அவருக்கு உண்டு. இடுக்கண்களை எல்லாம் நீக்கிற்று என்று கூறுவது மிகையல்ல.

சிவக்கவிமணி திரு க. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் இன்புடன் வாழ்ந்து பெரியபுராண விரிவுரையை முழுவதும் அச்சுவாகனம் ஏற்றி உயிர்களுக்கு ஈடேற்ற வழி தருமாறு இறைவன் அருள் புரிவானாக.

## 12. தீவிரம் இளமையிலெனில் தீவிரதரம் முதுமையிலே

" சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பில்
பட்டுப்பா டூன்றும் களிறு "

யானை புதைந்த அம்புக்கட்டால் புண்பட்ட இடத்தும் தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கம் உடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த விடத்தும் தளராது தம் பெருமையை நிலை நிறுத்துவர் என்றார் திருவள்ளுவர். இந்தப் பண்பு சிவக்கவி மணியவர்களிடம் இளமையிலும் முதுமையிலும் செயல்முறையில் கண்டது ஒன்று.

நாட்டில் 1902 முதல் 1911 வரை சுதேசி இயக்கம் தோன்றி மும்முரமாக வேலை செய்தது. அவ்வியக்கத்தின் முழுப்பலனே தற்போது நம் நாடு அடைந்துள்ள தன்னுரிமை விடுதலை. அக்காலத்தில் அவ்வியக்கம் இளைஞரிடம் வேரூன்றிப் பல அருஞ் செயல்களைச் செய்தது. உள்நாட்டுப் பொருள்களை ஏற்றுக்கொள்ளுதலும் பிறநாட்டுப் பொருள்களை விலக்கி ஒழித்தலுமே சிறப்பாக நடைபெற்றன. இவ்வியக்கத்தில் இளைஞராக இருந்த சுப்பிரமணியனார் ஈடுபட்டார். சீமைத் துணிகளை எரித்து உள்நாட்டுத் துணிகளைத் தாமே அணிந்து கொண்டார். அங்கங்கே கூட்டங்களில் சுதேசியத்தைக் குறித்து வெகு தீவிரமாக சொற்பொழிவுகளை ஆற்றினார். விபின் சந்திரபால், சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய வங்கப் பெரியார்களின் கருத்துக்களில் ஈடுபட்டார். பெரிய கூட்டங்களில் " நாமார்க்கும் குடியல்லோம் " " சங்கநிதி பதுமநிதி " என்ற திருப்பாடல்களை ஓதி அக்கருத்

துக்களை மக்களுக்குள் நிலவினார். இக்கொள்கை களுக்குத் தூண்டுகோலாக இருந்து பேச்சுவன்மையை ஊட்டிவைத்தவர் இவருடைய ஆசிரியரான திருச் சிற்றம்பலம் பிள்ளையவர்களே. அவ்வாசிரியர் வங்க தேசிய நூல்களான 'ஆனந்த மடம்' 'சந்திர சேகரன்' என்றவைகளைத் தமிழ்ப் படுத்தினார். அவைகளுக்குப் பாக்களை எழுதித் தந்தவர் சுப்பிர மணியனாரே. அவர் அவ்வியக்கம் முதிர்ச்சிபெறவே அக்காலத்து அரசியலார் திரு. வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, அரவிந்தகோஷ் முதலியவர்களைச் சிறை பிடித்த காலை சுப்பிரமணியனார் அப்பெரியார்களுக்கு மிக்க ஊக்கத்துடன் உதவி புரிந்தார். இந்த வகை யில் சுப்பிரமணியனார்க்கும் மிகுந்த தொல்லைகள் வந்தன. அவருடைய வீடு சோதனை செய்யப்பட்டது. அப்போது அவர் அடைந்த வருத்தங்களை அவர் ஒரு துரும்புபோல எண்ணி உதறினார். ஊக்கம் அத்தனை தலை சிறந்திருந்தது.

இளமையிலே அவர்பால் இருந்த ஊக்கம், முதுமையிலே ஒரு சிறிதும் தளர்ச்சி யடையவில்லை. இப்போது அரசியலில் கருத்து செலுத்தாவிடினும், சைவ உணர்ச்சியில் அதைவிடப் பதின்மடங்கு தீவிரம் ஆகி விளங்குகிறது. திருத்தொண்டர் புராணப் பேருரை முழுதும் வெளியிடுவது என்றால் மிகக் கடினமே. அதிலும் ஒன்று விடாமல் எல்லாப் பொருள் களையும் வெளியிடல் என்றால் கடினத்திலும் கடினம். இவ்வரும் செயலில் காகிதப் பஞ்சம், பணமுடக்கு, மக்களிடம் ஆதரவின்மை முதலிய அம்புகள் புதை கின்றன. ஆனால் ஊக்கம் கொண்ட யானை அவ்வம் புக் கட்டுகளைக் கண்டு அஞ்சுமா? இல்லவே இல்லை.

ஊக்கம் உண்டு. அது தளராது. அவ்வூக்கம் இளமை யில் பிறந்தது. அது ஒருக்காலும் தளராது. அது முன்னர் தீவிரமாக இருந்தது. இப்போது தீவிரதரம் ஆகி மிளிர்கிறது. ஆகவே தாம் எடுத்துக் கொண்ட அரும்பணி வெகுதீவிரமாக வளர்ந்து வருகிறது. இவ் வருமையை மக்கள் அறிந்து அவர் பட்ட அம்புப் புண் களை ஆற்றி அவருக்கு ஆறுதல் தருவார்களாக !

சிவக்கவிமணி பல்லாண்டு வாழ்க ! அவர் திருத் தொண்டு மேன்மேலும் செழிக்க !! அவருடைய திருத்தொண்டர் புராணப் பேருரை விரைவில் வெற்றியுடன் வெளிவருக !!!

60272